# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,550—1965 නොවැම්බර් 5 වැනි සිකුරාදා—1965.11.5**

14,550 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 163 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

LGD-GJ 10/2/2.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒற்ரோபர் மீ 15 ந் உ.

### கட்டளை

1964 யூலை 24 இன் 14,117 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளில் சொல்லப்படும் கேகாலை மாவட்டத்து கல்பொட கோறளை பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் கல்பொடகோறளை கிராமப் பிரதேச மாற்றத்தையும் மீளவரையறுத்தலையும் அலுத்நுவர கிராமப் பிரதேச அமைப்பையும் செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை அந்தப் புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக்குக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாயிருக்கும்.

2. 1965 சனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான பழைய கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் இத்துணைவிதிகள் சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு அந்தப் புதிய கிராமப் பிரதேசத்தில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப்பவையாகக் கருதவும்படும்.

3. 1965 சனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொதுநிதியின் வரவிலுள்ள தொகையில் ஒரு பகுதி, 1965 பெப்புருவரி 1 இல் இருந்து புதிய வாகிரிகல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

4. 1965 சனவரி 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகையில் மூன்றிலொன்று 1965 பெப்புருவரி 1 ல் இருந்து புதிய அலுத்நுவர கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

5. 1965 சனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து 1965 பெப்புருவரி 1 இல் இருந்து புதிய வாகிரிகல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாகக் கருதப்படும்.

13 எழுத்து மேசைகள்
10 கைபிடி நாற்காலிகள்
13 சாதாரண நாற்காலிகள்

---

### முக்கிய விளம்பரம்

*1965 ம் ஆண்டு கார்த்திகை (நவெம்பர்) மாதம் 8 ந் திகதி திங்கட்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு கார்த்திகை (நவெம்பர்) மாதம் 12 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு கார்த்திகை (நவெம்பர்) மாதம் 6 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1965 ம் ஆண்டு ஐப்பசி (ஒற்ரோபர்) மீ 29 ம் உ.*

---



7 6

1 தட்டெழுத்துப்பொறி முக்காலி
1 சாய்மனையுள்ள வாங்கு

6 அலுமாரிகள்
3 புத்தகந்தாங்கிகள்
1 கேள்விப்பத்திரப் பெட்டி

14 தட்டங்கள்
1 மைதாங்கி
1 மர ஞூப்தடி

1 துளையிடும் கருவி (தாங்கியுடன்)
1 சிங்கள " ஒலிம்பியா " தட்டெழுத்துப் பொறி 18"
1 ஜெஸ்டெட்னர் இணைப்படியெடுக்கும் பொறி இல. 26

1 இரும்புப்பெட்டி (தாங்கி சகிதம்)
1 தோற் தபாற்பை
1 தேதி முத்திரை அச்சு

1 அழைப்புமணி
1 உருக்குநாடா (100 அடி)
1 இரட்டுநாடா (66 அடி)
1 பழைய கிராமப் பிரதேசத்தின் பெரிய தேசப்படம்
1 சிங்கக்கொடி
1 சென்ட் தோமஸ் சுவர்மணிக்கூடு.

6. 1965, சனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதற் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து, 1965 பெப்புருவரி 1 இல் இருந்து புதிய அலுத்நுவர கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப் படுவதாகக் கருதப்படும்:—

8 எழுத்து மேசைகள்
7 கைபிடி நாற்காலிகள்
8 சாதாரண நாற்காலிகள்
1 தட்டெழுத்துப்பொறி முக்காலி
1 சாய்மனையுள்ள வாங்கு

4 அலுமாரிகள்
3 புத்தகம் தாங்கிகள்
8 தட்டங்கள்
1 மைதாங்கி

1 கம்பிகட்டும்பொறி
1 ஹூண்டர் இரும்புப் பெட்டி
1 அழைப்புமணி
1 இரட்டுநாடா (50 அடி)
1 உருக்கு நாடா (66 அடி)
1 சிறிய தேசப்படம்
1 றலே சைக்கிள் (இல. டி.எல். 16566)

7. 1965 சனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1965 பெப்புருவரி 1 இல், அந்தக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்துள்ள புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாகக் கருதப்படும்.

8. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள் பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்குமள வுக்கு, 1965 பெப்புருவரி 1 இல் இருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்படுவதாகக் கருதப்படும்.

9. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோரில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்கள், சாதனங்கள் கோப்புகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவா யிருக்குமளவுக்கு 1965, பெப்புருவரி 1 இல் இருந்து, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோருக்கு மாற்றப்படுவதாகக் கருதப்படும்.

10. அதன் முன்னுள், இன்னுள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளங் கள் கொடுப்பதற்குப் பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குள்ள பொறுப்புகள் மேற்காணும் முறையில பகிரப்படும் :—

(அ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் உதவப்பட்ட உபகாரச் சம்பளஞ் சம்பந்தமாக, ஒருபாதி வாகிரிகல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையாலும், மூன்றில் ஒன்று அலுத்நுவர கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையாலும் கொடுக்கப்படும்.

(ஆ) பழைய கிராமச் சபையில் சேவை செய்த பின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் பொருட்டான உபகாரச் சம்பளஞ் சம்பந்தமாக, ஒரு பாதி வாகிரிகல கிராமப் பிர தேசத்துக் கிராமச் சபையாலும் மூன்றில் ஒன்று அலுத்நுவர கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையாலும் கொடுக்கப்படும்.

(இ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் 1965, ஜனவரி 31 இல் சேவை செய்பவர்களின் உபகாரச் சம்பளஞ் சம்பந்த மாக, ஒரு பாதி வாகிரிகல கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையாலும் மூன்றில் ஒன்று அலுத்நுவர கிராமப் பிரதே சத்தின் கிராமச் சபையாலும் கொடுக்கப்படும்.

11. இந்த அட்டவணையில்—

" புதிய கிராமப் பிரதேசம் " என்பது வேறுவிதம் சொல்லப்பட்டா லன்றி, 1964 யூலை 24 இன் 14,117 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப் பட்ட கட்டளைகளால் மாற்றி மீளவரையறுக்கப்பட்ட வாகிரிகல கிராமப் பிரதேசத்தையேனும், அமைக்கப்பட்ட அலுத்நுவர கிராமப் பிரதேசத்தை யேனும் கருதும், மேலும், " பழைய கிராமப் பிரதேசம் " என்பது 1965 பெப்புருவரி 1 க்கு முன்பிருந்த கல்பொட கோறளைக் கிராமப் பிரதேசத்தைக் கருதும்.

11-294/1—5.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,550

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3. 30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறி வித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரூல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | ... | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | ... | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | ... | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... | 15 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.